தீக்கதிர்
செய்திகள்
04.06.2024

# தேர்தல் ஜனநாயகத்தை காத்திடக் கோரி மெழுகுவர்த்தி ஏந்தி மக்கள் இயக்கங்கள் ஆர்ப்பாட்டம்



மதுரை, ஜூன்.3

நாடாளுமன்ற தேர்தலில் நேர்மையான வாக்கு எண்ணிக்கையை வலியுறுத்தியும் தேர்தல் ஜனநாயகத்தை காத்திட வலியுறுத்தியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவை தகுதி நீக்கம் செய்ய கோரியும், அரசியல் சட்டத்தைக் காக்க கோரியும் மதுரை மாவட்ட நீதிமன்றம் முன்பாக திங்களன்று மக்கள் இயக்கங்கள் சார்பில் நூற்றுக்கு மேற்பட்டோர் கைகளில் மெழுகுவர்த்தி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது தேர்தல் ஆணையத்திற்கு எதிராகவும் மத்திய பாஜக அரசுக்கு எதிராகவும் கண்டன முழக்கங்களை எழுப்பினர். இதில் மக்கள் கண்காணிப்பக இயக்குனர் ஹென்றி திபேன், வழக்கறிஞர்கள், சமூக ஆர்வலர்கள் அரசியல் கட்சி தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளை சேர்ந்தவர்களும் வழக்கறிஞர்களும் கலந்து கொண்டனர்.